**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.170** **நாள் : 04.10.2024**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் புனரமைக்கப்பட்ட மெரினா நீச்சல் குளம் ஆகியவற்றினை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் புனரமைக்கப்பட்ட மெரினா நீச்சல் குளம் ஆகியவற்றினை இன்று (04.10.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் நீண்ட நாட்களாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் பிரித்தெடுத்து மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை ரூ.648.38 கோடி மதிப்பில் உயிரி அகழ்ந்தெடுத்தல் (Bio Mining) முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் நடைபெற்று வருகிறது.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் சுமார் 80 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்திலிருந்து குப்பை கொட்டும் இடமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மண்டலம் 1 முதல் 8 வரையிலான பகுதிகளில் சேகரிக்கப்பட்டு வரும் திடக்கழிவுகள் இந்த வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. இந்த வளாகத்தில் மார்ச் 2022ஆம் ஆண்டு ட்ரோன் சர்வே மூலம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, 252 ஏக்கர் நிலப்பரப்பில் 66.52 இலட்சம் டன் பழைய திடக்கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டு, பயோ மைனிங் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் இப்பணியினை சிறப்பாக மேற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்து நிலத்தை மீட்டெடுக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும், அதற்கான இடத்தினைத் தேர்வு செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில், தொழிற்சாலைகள் மற்றும் குடிநீர் தவிர பிற உபயோகப் பயன்பாட்டிற்காக கொடுங்கையூர் பகுதியில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட எதிர் சவ்வூடு பரவுதல் முறையில் அமைக்கப்பட்டுள்ள மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாட்டினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சுத்திகரிக்கப்பட்ட நீரினைப் பரிசோதித்துப் பார்த்தார்.

பின்னர், நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட தொடர் தொகுதி உலை முறையில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாட்டினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.1.20 கோடி மதிப்பில் மெரினா கடற்கரை நீச்சல் குளம் புனரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குத் தயார்நிலையில் உள்ளதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் திரு.நேதாஜி யு. கணேசன், துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), சென்னைக் குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**